**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இது உள்ளாட்சித் துறையைப் பொறுத்தது மட்டுமல்ல. கல்வித் துறையையும் பொறுத்தது. இரு துறைகளும் சேர்ந்து முடிவு செய்து எந்த வகையில் ஆசிரியப் பெருமக்களுக்கு உதவ முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கல்வித் துறைக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கும் ஆணை உள்ளாட்சித் துறைக்கும் பொருந்தும் என்று முன்பு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதில் கல்வி அமைச்சர் அவர்களும் பக்கத்தில் இருக்கிறார்கள். இருவரும் கலந்து உறுதியான ஆணை பிறப்பிக்கப்படுமா? ஆசிரியர்களுக்கு நல்ல செய்தி அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து இந்த அரசினுடைய கவனத்தில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Teachers promoted as Headmasters.*

* 38 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that teachers promoted as Headmasters with fifty years of age or twenty five years of service, need not pass Account Tests for confirmation and for eligibility to draw increments in High Schools under municipal administration; and

(*d*) if so, the reasons for not sanctioning increments to such Headmasters in certain Municipal High Schools in the State, for not having passed the Account Tests?

தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்கள்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐம்பது ஆண்டுகள் வயதடைந்து அல்லது இருபத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்து தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்கள், நகராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில், பணி உறுதியாக்கம், ஊதிய உயர்வு பெறுவதற்கான தகுதி ஆகியவற்றிற்காக, கணக்குத் தேர்வில் தேறியிருக்க வேண்டியதில்லை என்பது உண்மையா?

1978 செப்டம்பர் 7]

(இ) ஆம் எனில், கணக்குத் தேர்வுகளில் தேறியிருக்கவில்லை என்பதற்காக, மாநிலத்தில் ஒரு சில நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களுக்கு ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படாமல் இருந்ததற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. ஆர். தாமஸ் :** சில ஆண்டுகளுக்கு முன்னதாக அத்தகைய சலுகையை உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிற தலைமையாசிரியர்கள் அனுபவித்தார்கள் என்று கூறப்படுகிறது. அதற்குப்பிறகு ஆணை திருத்தப்பட்டிருக்கலாம். இருந்தாலும் 50 அல்லது 55 ஆண்டு முடிந்தவர்கள் அக்கவுண்ட் டெஸ்ட் தேர்வு எழுத வேண்டுமென்று இருக்கும் விதியை மாற்றி விதிவிலக்கு அளிக்க உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இதற்கு முன்னால் கல்வித் துறைக்கு இடுகிற ஆணை உள்ளாட்சித் துறைக்கும் பொருந்த வேண்டுமென்று உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தலைமையாசிரியர்களுக்கு என்னென்ன விதிகள் பொருந்துமோ அதே விதிகள் உள்ளாட்சித் துறைத் தலைமையாசியர்களுக்கும் பொருந்த வேண்டுமென்று அரசு கருதுகிறது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** அக்கவுண்ட் டெஸ்ட் தேற வேண்டுமென்ற ஆணை கல்வித் துறை தலைமையாசிரியர்களுக்கு இல்லை. அவர்களுக்கு ஒரு விதியும் உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு ஒரு விதியும் இருக்க வேண்டுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** உள்ளாட்சித் துறை, கல்வித் துறை ஆகியவற்றைப் பொறுத்தவரையில், எந்த அளவுக்கு விதிகளை, ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அவற்றை அவர்கள் மேற்கொள்வது நல்லது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இந்த அக்கவுண்ட் டெஸ்ட் போன்ற இலாகா தேர்வுகள் சர்விசில் உள்ளவர்களுக்கு 50 வயதுக்கு மேல் தேவையில்லை, அவர்களுக்கு விதிவிலக்கு புரமோஷனுக்காக அளிக்கப்படும் என்ற அமைப்பு இருக்கிறது. அவர்கள் அதற்காக விண்ணப்பித்து, அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதே நிலைமையை உள்ளாட்சித் துறை ஏற்றுக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்றுக்கொள்ளாது.

திரு. க. அறிவழகன் : என்னுடைய காதில் விழுந்த அளவில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ஆசிரியர்கள் தலைமையாசிரியராக பதவி உயர்வு பெற்றவர்கள் கணக்குத் தேர்வில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டியதில்லை என்று சொன்னதாக அறிகிறேன். ஆனால் மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கேட்டவுடனே கல்வித் துறையில் வேறு ஒரு ஆணை இருக்கிறது, அதன்படி நடத்தப்படும் என்பது போல் தோன்றுகிறது. இதில் எது உண்மை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்கள் கணக்குத் தேர்வில் தேறியிருக்க வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசு ஊழியர்கள் 40 வயது அடைந்துவிட்டாலே, அவர்களுடைய பதவிக் காலத்தில் ஒரு பதவி உயர்வுக்கு எக்செம்ஷன் கொடுக்கலாம் என்று விதி இருப்பதைப் போல இந்த உள்ளாட்சித் துறையிலும் அமுல்படுத்தி எக்செம்ஷன் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்கள் ஆற்ற வேண்டிய தலைமை ஆசிரியர் பதவிக்குத் தேவையான தேர்வு அது. அதனால் விதி விலக்குக்கு இடமில்லை.

*Children's Hospital, Egmore.*

* 39 *Q.*—THIRU KU. MA. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the lack of adequate number of beds, doctors and nurses in the Egmore Children's Hospital, Madras ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—